**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

அ.வ.எண்.182/2024 நாள் : 07.07.2026

**வா.சா:–1 வீரம்மாள் ஆஜர், சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

குறுக்கு விசாரணை (11ம் பிரதிவாதி தரப்பில்):–

சின்னாநாயக்கர் கிரையம் வாங்கிய 4 ஏக்கர் சொத்தில் கிரையத்திற்கு பின்னிட்டு ஒரு வீடு கட்டினார் என்றால் தற்போது 1 வருடம் முன்பு கட்டியுள்ளார். சின்னாநாயக்கர் வா.த.சா.ஆ.1ன்படி கிரையம் வாங்கிய பின்னிட்டு வீடு கட்டி அவரது வாழ்நாள் முழுவதும் அங்குதான் குடியிருந்தார் என்றால் கணபதிபாளையத்தில் மெத்தை வீட்டில் குடியிருந்தார். சின்னாநாயக்கர் கணபதிபாளையத்தில்தான் குடியிருந்தார் என்பதை காண்பிப்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம்தாக்கல் செய்துள்ளேன் என்றால் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். சின்னா நாயக்கர் பெயரில் கிரைய பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். அவர் எந்த தேதி, வருடத்தில் கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. நான் திருமணம் ஆகி வரும்போது அந்த மெத்தை வீட்டில்தான் குடியிருந்தார். சின்னா நாயக்கருக்கு கணபதிபாளையத்தில் எந்த ஒரு வீடும் இல்லை என்றாலும், அவர் அதில் குடியிருக்கவில்லை என்றாலும் சரியல்ல. தாவா B அட்டவணை சொத்தில் சின்னாநாயக்கருக்கோ, அவரது வாரிசுகளுக்கோ எவ்வித பாத்தியமும், உரிமையும்இல்லை என்றால் சின்னாநாயக்கர் வாரிசுகளுக்கு உரிமை உள்ளது. தாவா B அட்டவணை சொத்தில் நான் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யதாததற்கு காரணமே சின்னாநாயக்கருக்கு எவ்வித உரிமையும் இல்லாததுதான் காரணம் என்றால் சரியல்ல. 1981ம் ஆண்டு முதல் நான் தளுவம்பாளையத்து முகவரியில்தான் ஓட்டு போட்டு வருகிறேன் என்றால் என் கணவருடன் நான் சண்டைபோட்டு கொண்ட பிறகு நான் அந்த முகவரிக்கு சென்று விட்டேன். நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள தளுவம்பாளையத்தில் உள்ள வீடு யாருக்கு பாத்தியம் என்றால் அது புறம்போக்கு நிலத்தில் உள்ள வீடு என் அம்மாவிற்கு பாத்தியம். தளுவம்பாளையத்தில் உள்ள வீட்டிற்கு நான் வீட்டு வரி, மின் கட்டணம், குடிநீர் வரி செலுத்தி வருகிறேன் என்றால் எனது தங்கை கட்டி வருகிறார். நான் முதல்

**Copy of Deposition**

விசாரணை பத்தி 16ல் தாவா A அட்டவணை சொத்து இனம் 1 ரீ.ச.எண்.90/4 நெம்பர் காலையில் 11ம் பிரதிவாதிக்கு பாத்தியபட்ட 1 ஏக்கர் 62 சென்ட் பூமி போக இதர பூமி அனைத்தும் 16.11.2009 தேதியில் 3ம் பிரதிவாதியும், 1,2 மற்றும் 4 முதல் 8 பிரதிவாதிகளும் சேர்ந்து பத்திர எண் குறிப்பிட்டு நர்மதா என்பவருக்கும், தனபாலன் என்பவருக்கும் கிரையம் செய்து கொடுத்துள்ளது சரியே என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பிரமாண பத்திரிக்கை நான் கூறியதன் பேரில் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சொல்லியுள்ள கொடுமுடி சார்பதிவாளர் பதிவு எண்கள் 1659/2009 மற்றும் 74/2010 ஆகிய பத்திரங்களை எடுத்துப்பார்த்தேன் என்றால் சரிதான். மேற்படி இரண்டு பத்திரங்களின் நகல்தான் என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி இரண்டு ஆவணங்கள் படி நர்மதாவும், தனபாலனும் தாவா A அட்டவணை சொத்தில் 11ம் பிரதிவாதிக்கு 1.62 ½ சென்ட் போக மீதியை நர்மதா மற்றும் தனபாலன் ஆகியோர்கள் கிரையம் செய்து கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. தாவா A அட்டவணை சொத்து முழுவதும் எனது கணவர் காலத்திலேயே சின்னாநாயக்கரின் வாரிசுகள் சேர்ந்து கிரையம் ஆகிவிட்டது என்றாலும் அதில் நான் பங்கு பாத்தியம் கோரமுடியாது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் 11ம் பிரதிவாதி எடுத்த ஏல கிரையம் எனது கணவர் காலத்தில் சின்னாநாயக்கர் வாரிசுகள் சேர்ந்து 13.12.1985ம் தேதி 11ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரையம் மற்றும் 16.11.2009ம் தேதிய கிரையம் தனபாலன் மற்றும் நர்மதா ஆகியோர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்ட கிரைய ஆவணங்கள் சம்பந்தமான இந்த வழக்கில் மேற்படி ஆவணங்கள் எனது உரிமையை கட்டுபடுத்தாது என்று பரிகாரமும் இந்த வழக்கில் கோரவில்லை என்றால் சரியல்ல. தாவா A அட்டவணை சொத்துக்களின் ஆவணங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றாலும் நான் அதை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக எனது கணவரை கைவிட்டுவிட்டு வெளியே சென்றுவிட்டேன் என்றாலும், தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. நான் பிரிவு 37(2) தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டத்தின் கீழ்

## Copy of Deposition

செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. நானும், எனது மகளும் ராஜு என்கிற ராமசாமியை விட்டு தன்னிச்சையாக பிரிந்து தளும்பாளையத்தை சேர்ந்த நல்லமுத்து என்பவருடன் சேர்ந்து வாழ்ந்து வந்தோம் என்றால் பொய். இந்த வழக்கில் 9 முதல் 11 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் சேர்த்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சின்னாநாயக்கரின் வாரிசுகளுக்கும் எனக்கும் கடந்த 40 ஆண்டுகளாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளிடம் தாவா சொத்தை பாகம் பிரித்து கொடுக்குமாறு கேட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள சொத்துக்கள் சுமாராக எவ்வளவு சந்தை மதிப்பு பெறும் என்றால் தற்போது 1 ஏக்கர் 1 கோடிக்கு போகும். நான் வழக்கு தாக்கல் செய்தபோது தாவா சொத்தின் சந்தை மதிப்பு 1 ஏக்கர் ரூ.60,00,000/– மேல் விலைஇருக்கும். நான் தாவா சொத்தின் சந்தை மதிப்பை குறைத்து மதிப்பீடு செய்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது செல்லாது என்றால் சரியல்ல. தாவாB அட்டவணை சொத்திற்கும் இந்த வழக்கில் சின்னாநாயக்கருக்கும் அவரது வாரிசுகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லாத காரணத்தினால் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**3ம் பிரதிவாதி 11ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை தனதாக ஏற்றுக்கொள்கிறார்.**

மறுவிசாரணை:– இல்லை

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.07.07 14:57:06 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |